1442

No. M. 2475. JANUARY, 1931. Vol. VI—No 1.




# கிராம அபிவிருத்தி

## பாரஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை

14 MAR

ஆபீஸ்: மைலாப்பூர்: மதராஸ்.

பொருளடக்கம்.


| செ. | | பக்கம். |
|---|---|---|
| 1. | நமது உணவு (தொடர்ச்சி.) | 1. |
| 2. | அரிசியின் உற்பத்தியும் விலையும் | 5 |
| 3. | பாரெஸ்டு சம்மந்தமான குறைகள் | 8 |
| 4. | கிராம முன்னேற்றம்—மதிப்புரை | 10. |
| 5. | நமது பத்திரிகை | 11 |
| 6. | பாரெஸ்டு பஞ்சாயத்து ஸ்டாண்டிங்கு ஆர்டர் | 12 |


வருட சந்தா ரூ. 3.
தனிப்பிரதி அணா 6.

எடிட்டர் & மானேஜர்
ஏ. சுவாமிநாதய்யர், பி. ஏ.

உம்முடைய மதிப்பு என்ன தெரியுமா ?



உம்முடைய வருமானத்தைத் தெரிவித்து
எங்களைக் கேளுங்கள்:—

## யுனைடெட் நாஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்:

ஹெட் ஆபீஸ்: கராச்சி.

---


## The Magazine Press Limited, Chingleput.

**Printers to the Forest Panchayatdar's Union Limited, Madras.**

பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கு வேண்டிய புத்தகங்கள் கம்பிடம் இழ்கண்ட விலைக்கு எப்பொழுதும் கிடைக்கும் :—

தபால் மூலம் வேண்டுவோர் தபால் செலவையும் சேர்த்து முன்பாக மணியாடர் செய்தால் தபாலில் அனுப்பமுடியும் வி. பி. கிடையாது.

| | | | விலை | | | தபால் செலவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | குற்ற ரிபோர்ட்டு | 200 பக்கம் | 2 | 0 | 0 | 0 | 6 | 0 |
| 2. | கால் நடை பாஸ் | 100 ... | 1 | 0 | 0 | 0 | 3 | 0 |
| 3. | தழை பாஸ் | 100 ... | 0 | 12 | 0 | 0 | 3 | 0 |
| 4. | குண்டேக்கல் வகைரு பாஸ் | 100 ... | 0 | 12 | 0 | 0 | 3 | 0 |
| 5. | மதாந்தர ரிபோர்டு | 50 Forms | 0 | 8 | 0 | 0 | 3 | 0 |

எந்த புஸ்தகங்கள் வேண்டுமோ, அவைகளின் விலையையும் தபால் செலவையும் சேர்த்து மணியார்டர் அனுப்பினால், புஸ்தகங்கள் உடனே தபால் பார்ஸலில் அனுப்பப்படும்.

மானேஜர் : மாகஸீன் அச்சுக்கூடம் லிமிடெட், செங்கல்பட்டு.

# SADHANA
## AUSADHALAYA
### DACCA (Bengal)

—ADHYAKHA—

**Joges Chandra Ghose**, M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும் வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப் படும். வியாதியின் விவரத்தைத் தெரிவித்தால் இனாமாக மருந்து பட்டி அனுப்பப் படும்.

மகரத்வஜம். (சுவர்ணஸிந்தூரம்.)

அசல் தங்கத்துடன் ஒரு சேர் ... ரூ 4 0 0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து: பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரக்த சுத்திக்கும் ஏற்றது.

சாரிபாடி ஸாஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0 14 MA

சுக்ர ஸஞ்சீவி.

இது வீர்யக் குறைவு, அயோகத் தன்மை, சுவப்னஸ்கலிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0.

அபல பந்தப ஜுகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும் இடுப்பு நோய், முதுகு வலி கர்ப்பபை வியாதி, அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2. 50 டோஸ் ரூ 5.

செவிட்டுத்தன்மை

மண்டை இடி, தலைவலி முதலியவை சுவஸ்தமாகும்.

நூதனமான மேநாட்டு மருந்து

லார்மலீன்

(ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.)

லார்மலீன் என்னும் இம்மருந்தை வீடுகளில் வேறு அதிகப்பணச்சிலவு இல்லாமல் மிகவும் சுலபமாக உபயோகிக்கக்கூடியது. இக்களிம்பு, நோய் உள்ள இடங்களில் தடவிய மாத்திரத்தில் வலியைப் போக்கும் தன்மை யுள்ளதாயிருக்கிறது.

இதற்கு அநேக நற்சாக்ஷிப்பத்திரங்களும் கிடைத்திருக்கின்றன.

நம்பிக்கையுள்ள நற்சாக்ஷிப் பத்திரம்.

கிரைடன் நகரம், ஒயிட் ஹார்ஸ் ரோட்டிலுள்ள ஸ்ரீமதி E. குரோ எழுதுவதாவது:—"தாங்கள் எனக்கு அனுப்பிய சிறிய டின் லார்மலீன் களிம்பு என்னை என் கஷ்டத்தினின்றும் நீக்கி, என் தலைவலி, மண்டை இடி முதலியவைகளைச் சாந்தப்படுத்தி என்னைச் சந்தோஷிக்கச் செய்தது. அதிகச் சிலவு செய்தும் குணமாகமல், கடைசியில் தங்களால் குணமடைந்ததற்கு நான் தங்களுக்கு நன்றி பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்".

இன்றைக்கு ஒரு புட்டியை உபயோகித்துப் பாருங்கள்: மூன்று ரூபாய் மணியார்டர் செய்தால் எல்லா விலாசத்திற்கும் அனுப்பப்படும்.

விலாசம்:—

ஆரல் மெடிகேஷன் பிர்க்பெக் ரோட்டு,

பெக்கன்ஹேம், இங்கிலாந்து.

*Address Orders to:—*

AURAL MEDICATION, BIRKBECK ROAD,

Beckenham, Eng.

199400

14 MAR 1931

# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடயர்ட் டிப்டி கலெக்டர்.

ஆபீஸ்: மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் VI. 1931ஞு ஜனவரிமீ நெ. 1

## நமது உணவு.

### விடாமின் சி.

சி விடாமினை சொறி கறப்பான் முதலிய க்ஷோர சர்ம வியாதிகளைத் தடுக்கிற விடாமின் என்று சொல்வார்கள். சொறி கறப்பான் முதலிய நோய்கள் நம்முடைய தேசத்திய ஜனங்களுள் அதிகமாகக் காணப்படுகின்றனவென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. சி விடாமினானது பச்சைக் கீரைகளிலும் அநேக காய் கனிகளிலும் நிறைந்திருக்கிறது. அது அரிசி, பார்லி, கோதுமை, விதைகள் முதலியவற்றில் இல்லை. ஆனால் தான்ய வகைராக்களை நீரில் போட்டு முளைக்க வைத்தால் அப்பொழுது அவைகளில் இவ்விடாமின் நிறம் ஏற்படுகிறது. முளை வந்த தான்யங்களை ஜனங்கள் பச்சையாக உண்ண வேண்டும். அவைகளை அடுப்பின் மேல் வைத்தாலும் 2 நிமிஷங்களுக்குமேல் தீயின்மேல் இருக்கக்கூடாது' பிராணிகள் விடாமின் சியையுடைய கீரைகளையும் காய்கனிகளையும் புசிக்கையில் இவ்விடாமினானது அவைகளின் சரீரத்தில் கிரஹிக்கப்பட்டு அப்பிராணிகளின் இரத்தத்திலும் கல்லீரலிலும் சேர்கின்றன. பிராணிகளின் மாம்ஸத்தில் இவ்விடாமின் வெகு அல்ப அளவிலிருக்கிறது. பிராணிகளின் ஸ்தன்யத்திலும் இவ்விடாமின் சேர்கிறது. ஆடு, மாடுகள் இவ்விடாமினைப் பச்சைப் புல் தழைகளில் மேய்வதால் அடைந்து கொள்கின்றனவாதலால் நாம் பாலையடைய வேண்டிய ஆடுமாடுகளுக்கு பச்சைப் புல் தழை உணவைத்தான் அதிகமாகக் கொடுக்க வேண்டுமேயொழிய வைக்கோலை அதிகமாகப் போடவே போடக்கூடாது. சென்னை முதலிய நகரங்களில் குழந்தைகளுக்கு கறப்பான் நோய் வருவது பச்சைகளில் அதிகமாக மேயாத பசுக்களின் பால் உபயோகப்படுத்தப்படுவதே தான். பாலி

லிருந்தே ஒரு சிறு பையன் சி விடாமினை அடைய வேண்டுமானால் அவனுக்கு $\frac{1}{2}$ படி அல்லது $\frac{3}{4}$ படி (பட்டணம்படி) பால் நாளொன்றுக்குக் கொடுக்க வேண்டும். இவ்விடாமின் காய்களிலும் பழங்களிலும் பாலில் காட்டிலும் அதிகமாக விருக்கிறது.

விடாமின் சி யானது கொழுப்புகளில் இல்லை. அது வெண்ணெய், நெய், எண்ணெய் காய்கறி வத்தல்கள், சர்க்கரை வெள்ளை மாவுகள் இவைகளிலும் இல்லை. அது பால், காய்கறிகள் இவைகள் அடுப்பின் மேல் வைக்கப்பட்டால் போய்விடுகிறது.

தீயின் மேல் வைக்கப்படும் பொழுது பாத்திரங்கள் காத்துப்படாமல் மூடி வைக்கப்பட்டால் அதிக அளவில் இவ் விடாமின் போய்விடாது. காய் கறிகளை வேகவைக்கும் பொழுது ஸோடாவைப் போட்டாலும் இவ் விடாமின் நசித்து விடும். இவ்விடாமின் அதிக சூடைத்தாங்காது. நமது தேசத்தில் ஜனங்கள் காய்ச்சின பாலைக் குழைந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள். காய்ச்சின பாலைக் கொடுக்கிறவர்கள் குழந்தைகளுக்கு ஆரஞ்சு முதலிய பழச் சாறுகளை யதிகமாகக் கொடுக்கவேண்டும்.

விடாமின் சி தான் சரீரத்தில் இரத்தத்தைச் சாந்தமாகவும் சரியான ஸ்திதியிலும் வைக்கிறது. அது மற்ற விடாமின்கள் சரீரக்கட்டிட வேலையைச்சரியாய்ச் செய்ய வேண்டிய வகையில் உபயோகப்படுகிறது. பல்; எலும்பு முதலியவைகள் உண்டாய் வளர்வதிலும் உபயோகப்படுகிறது, குடலை நல்ல ஸ்திதியில் அமைக்கிறது. சரீரத்தில் விஷக்கிருமிகள் சேராத படியும் செய்கிறது. பல்லீறில் புண்வருவதும் இரத்தம் வருவதும் நாம், விடாமின் சி யையுடைய பொருள்களை வேண்டி அளவில் புசியாமலிருப்பது தான். நமக்குச் சொறிச்சிரங்கு, கரப்பான் பல்லீறில் புண் இவைகளில்லாத போனால் நாம் விடாமின் சி யைப்போதுமான அளவில் உட்கொண்டு வருகிறோமென்றே நினைத்துக் கொள்ளக் கூடாது. சிரங்கு இரத்தம் ஏற்படு வதற்கு முன் பலவித கோளாறுகள் சரீரத்தில் தோன்றும். அவைகளில் முக்கியமான வைகளாவன:—பசியின்மை, திணரல், சோம்பேரித்தனம், கோபம், நாக்கிக் குறைவு, சரீர நிறை குறைதல், மார்பு படபடப்பாக அடிக்கிறது. பல்விகாரம், துர்கந்த ஸ்வாஸம், எலும்புப் பூட்டுகளில் நோவு, காலில் நோவு, கணுக்கால் உப்புஸம்.

I விடாமின் சி யை நிறப்பவைத்துக் கொண்டிருக்கிற பொருள்களாவன. வெதங்கிப் போகாத பச்சைக் காபேஜிகள்; பசலைக்கீரை; முளைக்கட்டி முளைவந்திருக்கிற பட்டாணி, கடலை, பயறு, கொள்ளு தொவரை, உளுந்து முதலிய தானியங்கள்; எலுமிச்சம்பழ ரஸம்; ஆரஞ்சு ரஸம்; தக்காளிப்பழம் தக்காளிபழ ரஸம்.



II சி விடாமினைக் கூடிய வரையில் வேண்டிய அளவில் வஹித்துக் கொண்டிருக்கிற பொருள்களாவன: வெதங்கிப் போகாத பச்சைக்காரட்டு; லேட்டியூஸ் கீரை; முள்ளங்கிக் கீரை; ஸெலரி கீரை; வேகவைக்காத உருளைக் கிழங்கு; அவரைக்காய்; சக்கரை வெள்ளிக் கிழங்கின் சார்; முளை வந்த அவரைக் கொட்டை; ஆரஞ்சு தோல்; பீச்சஸ்; அனாசிப்பழச்சார்; நாக தாளி.

III சி விடாமினை குறைவான அளவில் வஹிக்கிற பொருள்களாவன: பால்; வெண்ணெயெடுத்த பால்; மோர்; தயிர்; முளைவந்த பார்லி ஓட்சு சோளம்; வெந்த காபேஜ்; காலிப்ளவர்; வெங்காயம்; வெந்த உருளைக்கிழங்கு; தர்பூசிப்பழம்; வாழைப்பழம்; ஆப்பில்கள்.

IV சி விடாமினை வெகு வெகு அல்ப அளவில் வஹிக்கிற பொருள்களாவன: கொழுப்பில்லாத மாம்ஸம்; முட்டைகள்; கோதுமை மாவு; வெள்ளை மாவு; சோளம்; கேழ்வாகு; கம்பு; பார்லி; உலர்ந்த பட்டாணி; பருப்பு தினுசுகள்; கொள்ளு; தேன்; நல்லெண்ணெய் முதலிய எண்ணெய்கள்; கொழுப்புகள்; உலர்ந்த பழங்கள்; கொட்டைகள்; டின்களில் வரும் பழங்கள்; டின் பால்கள்; டின்களில் வரும் உணவு மாவுகள்.

நாம் சி விடாமினைத்தக்க அளவில் அடைய வேண்டுமானால் உணவுப் பொருள்களில் எதையாகிலும் தினந்தோறும் கீழே குறிக்கப்பட்ட அளவுகளில் சாப்பிட வேண்டும்:—

பால் 2 அல்லது 3 பைண்டுகள்; 2 பவுண்டு முள்ளங்கி அல்லது திராக்ஷிப்பழம்; ஒரு பவுண்டு காரட்; $\frac{1}{2}$ பவுண்டு ஆப்பில் அல்லது வாழைப்பழம் அல்லது உருளைக்கிழங்கு; 3 அவுன்ஸ் வாடாத எலுமிச்சம் பழங்கள் அல்லது ஒரு அவுன்ஸ் எலுமிச்சம்பழ ரஸம் அல்லது ஒரு அவுன்ஸ் ஆரஞ் ரஸம் அல்லது முக்கால் அவுன்ஸ் அப்பொழுது தான் பரித்த காபேஜின் சார். நாம் சாகங்களை சமைத்து விட்டால் சி விடாமின் குறைந்து போகிறது; ஆனபோதிலும் நன்றாய்ச் சமைக்கா விட்டாலும் ஜீர்ணமாகிறதில்லை. மேல் கூறிய பொருள்களில் அநேகப் பொருள்கள் வேக வைக்காமலே புசிக்கப்படகூடுமாதலால் நாம் சிலவற்றை வேக வைக்காமலே தினந்தோறும் உண்பது நலம்.

## விடாமின் டி.

விடாமின் டி யானது பாலிலும், வெண்ணெயிலும், நெய்யிலும், முட்டையின் மஞ்சள் கருவிலும் மீனெண்ணெய்களிலுமிருக்கிறது. காட்லிவர் ஆயிலில் இவ்விடாமின் அதிகமாக விருக்கிறது. இவ்விடாமின் தேங்கா யெண்ணெயி லிருக்கிறது, மற்ற சாக எண்ணெய்களில் அது இருக்கிறதாகத் தெரியவில்லை. இவ்விடாமினானது சூரிய வெளிச்சத்தினால் கூட உண்டாகிறது. மனிதன்

வெய்யலில் நின்றால் அவன் இவ்விடாமினை யடைகிறான் நல்லெண்ணையைப் போன்ற சாக எண்ணைகள் வெய்யலில் வைக்கப்பட்டால் அவைகளும் இவ்விடமினை அடையக்கூடும். ஆதலால் அவைகளை ஆஹாரத்தோடு உபயோகிப்பதற்கு முன் வெய்யலில் வைத்தல் வேண்டும். நம்முடைய தேசத்தில் அநேகர் எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் பொழுது வெய்யலில் நின்று கொண்டு தேய்த்துக் கொள்கிறார்களே அது நல்ல வழக்கம். அப்படி அவர்கள் செய்வதினால் அவர்கள் விடாமின் டியை அடைகிறார்கள்.

விடாமின் டி உணவில் சரியான அளவில் இல்லாவிட்டாலும் மனிதர்கள் வெய்யலில் அதிகமாக சஞ்சரிக்காமல் போனாலும் அவர்களின் எலும்பு மெதுவாகி வளைந்து போம். குழந்தைகள் மார்கொண்டை யிட்டுக்கொள்வதும் வயது வந்தவர்களின் எலும்புகள் மெலிந்து வளைந்து போவதும் இக்காரணத்தினால் தான். ஆங்கிலத்தில் இவ்வித நோய்களுக்கு ரிக்கட்ஸ் என்றும் ஆஸ்டியோமால் ஷியா வென்றும் கூறுகிறார்கள். அமெரிகாவிலும் ஐரோப்பாவிலும் சூரிய வெளிச்சம் குறைவாயிருப்பதாலும், டி விடாமினுள்ள உணவுப்பொருள்கள் அதிகமாக இல்லாமலிருப்பதாலும் ஜனங்கள் சூரிய வெளிச்சம் படாத இருட்டறைகளில் வஸிப்பதால் அத்தேசங்களில் மேற் கூறிய நோய்கள் அதிகமாகக் காண்கின்றன. நம்முடைய தேசத்தில் வெய்யலில் ஜனங்கள் அதிகமாக நடமாடுவதால் இந்நோய்கள் அதிகமாக ஏற்படுகிறதில்லை. நம்முடைய தேசத்திலும் கோஷா ஸ்திரிகளுக்கு இந்நோய்கள் உண்டாவதற்குக் காரணம் அவர்கள் சூரிய வெளிச்சம் படாமலே இருட்டறைகளில் வஸிப்பது தான். ஆர்க்டிக் பிரதேசங்களில் சூரிய வெளிச்சமே யில்லாத போனாலும் அப்பிரதேசங்களின் ஜனங்கள் மீன் எண்ணைகளை ஆகாரங்களில் அதிகமாகச் சேர்த்துக்கொள்கிற படியால் அவர்களுக்கும் இந்நோய்கள் வருகிறதில்லை.

மேற்கூறிய நோய்கள் உணவுகளில் பாஸ்பரஸும் கால்ஷியமும் சரியானபடி அமையா விட்டாலும் உண்டாகக் கூடுமென்று ஏற்கனவே கூறியிருக்கிறோம். உணவுகளில் தக்க அளவுகளில் கால்ஷியமும் பாஸ்பரஸும் இருக்க வேண்டும். பாஸ்பரஸ் அதிகமாகவும் கால்ஷியம் குறைவாகவும் கூட இருக்கக் கூடாது. கால்ஷியமும், பாஸ்பரஸும் தான் எலும்புகளைத் தக்கபடி அமைக்க வேண்டிய பொருள்கள். இவைகள் இரண்டும் தக்களவுகளில் இல்லாவிட்டால் எலும்புகள் சரியாக அமையமாட்டா. இவைகள் தக்க அளவுகளில் ஏற்பட்டிருந்தாலும் அவைகளைக் கட்டிட வேலையில் உபயோகிப்பதற்குத் தக்க அளவில் விடாமின் டி யும் சூரிய வெளிச்சமும் வேண்டும்.

விடாமின் டி யைத் தக்கபடி அமையாத குழந்தைகள் திடுக்கிட்டு அழுது கொண்டும் தூக்கமில்லாமலும் இருக்கும். அவைகளின் தசை நார் நரம்புகள்



எல்லாம் துவண்டு சக்திக்குறைவோடிருக்கும்: நன்றாய் நிற்கக்கூட சக்தியிராது. வயிற்றின் தசைகள் கூட மெலிந்து சக்திக்குறைவோடிருக்கும். அக்குழந்தைகளுக்கு மலபந்தன முண்டாகும், குணவயிறு தட்டும். அவைகளின் கால் எலும்பு வளைந்து போகும். முதுகெலும்பும், புஜ எலும்புகளும் கோணிப்போகும். இரத்தம் குறையும். காக்காய் வலிப்புண்டாகும். அடிக்கடி மார்ச்சளி உண்டாகும். விடாமின் டி உணவுகளில் குறைவாகவிருந்தால் பற்கள் சரியாய் அமையா, பற்கள் அழிந்தும் போகும்.

நாம் எல்லா விடாமின்களையும் அரிசி, கோதுமை முதலிய தான்யங்கள், பால் கல்லீரல், முட்டை, மீன், காய்கள் பழங்கள் கீரைகள் இவைகளிலிருந்து அடைந்து கொள்ளக்கூடும். அரிசி, கோதுமை, பார்லி முதலிய தானிய சாப்பாடுடன் நாம் பால், மோர், முட்டை, கல்லீரல், மீன், பழம், கீரை முதலியவைகளைச்சாப்பிடுவோமாகில் நாம்தக்கபடி விடாமின்களையும், புரோடீன்களையும், உலோக உப்புகளையும் கொழுப்புக்களையும் அடைவோம். நமக்கு பாலும், காயும், பழமும், கீரையும் தக்கபடி கிடைத்தால் மாமஸமும் மீனும் வேண்டியதில்லை. பால், முட்டைகள், காய்கள், பழங்கள், கீரைகள் இவைகள் புரோடீன்களையும், உலோக உப்புக்களையும், விடாமின்களையும் நிரம்ப வஹிக்கின்றன.

## அரிசியின் உற்பத்தியும் விலையும்.

பர்மா தேசத்து கவர்மெண்டார் பர்மாவில் வியவஸாய உற்பத்திகளின் விலை வாசிகள் குறைந்திருப்பதைப்பற்றி ஒரு ரிபோர்டை வெளியிட்டிருக்கிறார்கள். பர்மாவில் விலைகள் பின் குறிக்கப் பட்ட வாறு குறைந்திருக்கின்றன:—

| | 1930 ஷு ஏப்ரில் மாதத்தில் | தற்போதில் |
|---|---|---|
| | ரூ | ரூ |
| நெல் | 145 | 94 |
| அரிசி (உயர்வு) | 362 | 502 |
| எள்ளு | 450 | 270 |
| பருத்தி | 67 | 30 |
| வேர்க்கடலை | 150 | 90 |
| தினை | 200 | 180 |
| ரப்பர் | 7 அணா | 4 அணா |

OFFICE OF ... 14 MAR 193 ... MA

வெள்ளியமும் ரூ 1395 இலிருந்து 1019 ரூபாய்க்கு இறங்கியிருக்கிறது.

மற்ற தேசங்களிலும் விலைகள் ஏறக்குறைய இம்மாதிரியாகவே இறங்கியிருக்கின்றன. நமது தேசத்தில் ஜவுட்டானது 67 ரூபாயிலிருந்து 30 ரூபாய்க்கு இறங்கியிருக்கிறது. 8000 மைல்களுக்கு அப்பால் இருக்கிற தென் அமெரிக்காவிலும் ஜனவரி 1929 இலிருந்து விலைகள் கீழே கண்டபடி குறைந்து வந்திருக்கின்றன:—

ஆர்ஜன்டைன் கோதுமையின் விலை மூன்றில் ஒரு பங்கு.
ஓட்லின் விலை பாதி.
கம்பளத்தின் விலை மூன்றில் ஒரு பங்குக்கு மேல்.
தோலின் விலை மூன்றில் ஒரு பங்குக்கு மேல்.
பிரஜிலியன் காபியின் விலை பாதி.
சக்கரையின் விலை பாதி.
பருத்தியின் விலை பாதி.
லண்டனில் விலைகள் கீழே குறிப்பிட்டபடி குறைந்திருக்கின்றன:—

| | 1930 ஏப்ரிலில் ரூ. | 1930 அக்டோபரில் விலை ரூ. |
|---|---|---|
| 496 lb கோதுமை | 40 | 30 |
| 112 lb அரிசி | 14 | 10 |
| 2240 lb ஜூட் | 25 | 15 |
| 1 lb கம்பளம் | 11 அணு | $10\frac{1}{2}$ அணு |
| 1 lb ரப்பர் | 7 அணு | $4\frac{1}{2}$ அணு |
| 2240 lb வெள்ளீயம் | 2100 ரூ | 1600 ரூ |
| 2240 lb செம்பு | 850 ரூ | 750 ரூ |

ஆகவே, எல்லா தேசங்களிலுமே விலைகள் இறங்கி வருகின்றன வென்பது விளங்கும். உலகமெங்குமே விலைகள் இறங்கி வருவதால் உலகத்திலேயே இவை சம்பந்தமாக பொதுவான காரணங்களும் சம்பவங்களுமிருக்கின்றவென்பதும் விசதமாகும். உலகமெங்குமே அதிக விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது. எல்லா தேசங்களிலுமே அரிசி அல்லது கோதுமை தான் முக்கிய உணவு தானியங்களாக விருக்கின்றன. வெகுசாய்க் குளிர் தேசங்களில் கோதுமையும் உஷ்ண தேசங்களில் அரிசியும் உணவு தானியமாக விருந்த போதிலும் அநேக தேசங்களில் ஜனங்கள் எந்த தானியம் மலிந்திருக்கிறதோ அதையே பின்பற்றுகிறார்கள். தற்போதில் உலகமெங்குமே நெல் சாகுபடியும் கோதுமை சாகுபடியும் அதிகமாக அநுஷ்டிக்கப்படுகின்றன. உலகத்தில் எல்லா ஜனங்களுக்கும் உணவுக்கு வேண்டிய அளவுக்கு மேல் உணவுப் பொருள்கள் விளைக்கப்படுகின்றன. 1928ம் ௵ இல் அமெரிக்காவில் கோதுமை அபரிமிதமாய் விளைந்தது. 1929ம் ௵ இல் ஆகஸ்டு மாதக்கோடியில் ஜனங்கள் சாப்பிட்ட பின்பு சண்டாக் கடைகளில் 15 கோடி டன் கோதுமை இருந்ததாம். 1929ம் ௵ இல் ஐரோப்பாவிலும் கோதுமை மேற்கூறியவாறே அபரிமிதமாக விளைந்தது. கிரேட் பிரிடனனின் ஜனங்கள் கோதுமை உணவை வரவரக் குறைத்துக் கொண்டும் வருகிறார்கள். இக்காரணங்களினால் ஒவ்வொரு வருஷத்தின் கோடியிலும் உலகத்தில் அதிக கோதுமை மீந்து விடுகிறது.



| வருஷம் | ஒவ்வொரு வருஷக்கோடியிலும் மீந்திருந்த கோதுமை அளவின் விவரம் |
|---|---|
| 1924 | 82 கோடி டன்கள் |
| 1925 | $87\frac{1}{2}$ கோடி டன்கள் |
| 1926 | 89 கோடி டன்கள் |
| 1927 | 91 கோடி டன்கள் |
| 1928 | 94 கோடி டன்கள் |
| 1929 | 101 கோடி டன்கள். |

தற்போதில் கோதுமையை வியாபாரத்திற்கு வரவழித்துக் கொள்கிற தேசங்களால் 20 கோடி டன்கள் தான் கேட்கப்படுகின்றன; உலகத்திலோ 33 கோடி டன்கள் இருக்கின்றன.

கோதுமை உற்பத்தி இப்படியிருக்க நெல் உற்பத்தி விவரங்களைக்சற்று கவனிப்போம். அடியில் குறிக்கப்பட்ட விவரங்கள் நெல் சாகுபடி பூமியானது மஹாயுத்த காலத்திற்குப் பிறகு எவ்வளவு அதிகமாயிருக்கிறதென்பதை எடுத்துக் காட்டும்:—

| | பர்மா | சியம் | இந்தோ சீனு |
|---|---|---|---|
| | ஏகராக்கள் | ஏகராக்கள் | ஏகராக்கள் |
| 1914 | 10,065,000 | 4,521,000 | 8,546,000 |
| 1928 | 11,686,000 | 6,696,000 | 12,324,000 |
| அதிகமாயிருக்கிற விஸ்தீரணம் | 1,621,000 | 2,175,000 | 3,778,000 |

| | இந்தியா | ஜப்பான் | டச்சு ஈஸ்டு இந்தியா |
|---|---|---|---|
| | ஏகராக்கள் | ஏகராக்கள் | ஏகராக்கள் |
| 1914 | 68,980,000 | 11,260,000 | 5,950,000 |
| 1928 | 70,060,000 | 12,950,000 | 7,538,000 |
| அதிகமாயிருக்கிற விஸ்தீரணம் | 1,080,000 | 1,690,0?0 | 1,588,000 |

அரிசியை யுண்பவர்களின் சங்கியையும் அதிகமாகி யிருக்கிறது. ஆன போதிலும், அதிக விஸ்தீரணமும் அபரிமித விளைச்சல்களும் உலகத்திற்கு உபயோகத்திற்கு வேண்டிய அளவுக்கு மேல்பட்ட அரிசி நிதியை ஏற்படுத்தி விட்டன வென்பது நன்றாய்த் தெரிகிறது.

அரிசிவிலை நயத்துப்போனதற்கு இன்னொரு காரணமும் உண்டு. தேசங்களில் உள்நாட்டில் வெள்ளி நாணயமும் நோட்டுகளும் வியாபார வியவஹாரங்களில் சிலாவணியானபோதிலும் ஒருநாட்டுக்கும் மற்றொன்றுக்கும் உள்ள வியாபார வியவஹாரங்களில் அவைகள் சிலாவணியாகிற தில்லை, அவைகளுக்குப்பதிலாகத் தங்கம்தான் சிலாவணிப் பொருளாக விருக்கிறது. ஆகவே பொன்கட்டி தான் உலக வியாபார வியவஹாரங்களில் சிலாவணி வஸ்துவாக விருக்கிறது. உலகத்தின் பொன் உற்பத்தியானது தற்போதில் மஹாயுத்த காலத்துக்கு முன் காலத்தில் சாட்டிலும் குறைந்து விட்டது. பொன் உற்பத்தியானது 1914 இல் 90 கோடி பவுன்கள்; 1915 இல் 96 கோடி பவுன்கள்; 1923 இல் 88 கோடி பவுன்கள்; 1929 இல் 83 கோடி பவுன்கள். உலகத்தில் கோதுமையின் விளைச்சலும் நெல்லின் விளைச்சலும் அபரிமிதமாக விருத்தியாகி வருகையில் பொன்னின் உற்பத்தி வரவரக் குறைந்து போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே விலைகள் இறங்குகின்றன.

உலகத்திலுள்ள பொன்னின் மொத்தம் 2200 கோடி பவுன்கள் இவையெல்லாமே வியாபார சிலாவணிக்கு உபயோகுமானால் விலைகள் அத்தனை சீக்கிரத்தில் இறங்கவே இறங்கா. சில தேசங்களில் பொன் நிதி அதிகமாயிருக்கிறது. அமெரிகா ஐக்கியநாடுகளில் 900 கோடி பவுன்களும், பிரான்ஸில் 400 கோடி பவுன்களும் இருக்கின்றன. இத்தேசங்களுக்கு அந்நிய நாடுகளிலிருந்து சாமான்கள் வேண்டு மென்பது மில்லை. ஆதலால் அவைகளின் பொன் நிதியில் கொஞ்சம் கூட அந்நிய நாடுகளுக்குச் செல்கிற தில்லை. இன்னும், அவைகள் அந்நிய நாடுகளுக்குச் சாமான்களை விற்கிற வகையில் பொன்னை அடைகின்றன. ஆனதுபற்றி அத்தேசங்களில் தங்கம் சிலவாகாமல் சேர்ந்து சேர்ந்து அடைபட்டிருக்கிறது. பூமியில் பள்ளம் வெட்டப்பட்டு அதில் மூடி வைக்கப்பட்டிருப்பது போலிருக்கிறதே யொழிய உலக உபயோகத்திற்காக விருப்பதாக விருக்கவில்லை. அவ்வளவு தங்கமும் உலக வியாபாரத்திற்கே உபயோகப் படுகிறதில்லை யாததால் விலைகள் இறங்கியிருக்கின்றன.

## கோயம்புத்தூர் ஜில்லாவில் பன்னிமடை கிராமத்தில் ஜனங்களின் பாரெஸ்டு சம்பந்தமான குறை.

பன்னிமடை கிராமத்தில் நன்றாய் வேலை செய்கிற கூட்டுறவு சங்கம் ஒன்று நடந்து வருகிறது. இச்சங்கமானது பல தேசாபி விருத்தி முயர்ச்சி



களையும் நடத்தி வருகின்றது. பன்னிமடை கிராமத்தின் ஜனத்தொகை 3420 அதிலுள்ள மாடுகளின் சங்கியை 3211. மேய்ச்சல் பூமியானது இந்த கிராமத்தில் மாடுகளின் சங்கியைக்குத் தக்கபடி யில்லாமையால் கூட்டுறவு இலாகா ரிஜிஸ்டிரார் அவர்கள் பன்னிமடைச் சங்கத்தாரை கிராமத்தில் ஒரு பாரெஸ்டு பஞ்சாயத்தை உண்டாக்கும் படி யோசனை சொன்னார். சங்கத்தார் முதல் முதலில் குருடிமலையின் அடிவாரத்தில் உள்ள ரிஸர்வின் ஒரு பாகத்தை புரம்போக்குக்கு மாற்றி கிராம மாடுகளின் மேய்ச்சலுக்காக அதைக் கொடுக்கும் படி பாரெஸ்டு ரேஞ்சு ஆபீசரைக் கேட்டார்கள். பாரெஸ்டு ரேஞ்சு ஆபீசர் சங்கத்தின் வேண்டுகோளைப் பாலக்காட்டு ஜில்லா பாரெஸ்டு ஆபீசருக்கு அனுப்பினார். ஜில்லா பாரெஸ்டு ஆபீசருக்கு அவர்கள் அவ்வேண்டு கோளுக்கு இணங்கவில்லை. 1929-ம் வருஷம் அக்டோபர் மாசம் 27உ யன்று சங்கத்தின் மஹாசபை கூடின பொழுது கிராமத்தில் பாரெஸ்டு பஞ்சாயத்து ஒன்று ஏற்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது அது சம்பந்தமாய் கலெக்டருக்கும் பாரெஸ்டு பஞ்சாயத்து ஆபீஸருக்கும் சங்கத்தார் மனுவை யெழுதிக் கொண்டார்கள். பாரெஸ்டுப் பஞ்சாயத்து ஆபீசர் பன்னிமடைக்கு வந்து இடத்தைப் பார்வையிட்டு விட்டுப்போனார். ஆனால் கலெக்டர் அவர்கள் 1930-ம் வருஷம் மார்ச்சு மீ 31உ யன்று சங்கத்தாரின் வேண்டுகோளைத் தான் அநுமதிக்க முடியாதென்று உத்திர விட்டார். சங்கத்தார் மறுபடியும் கலெக்டருக்கு மனுச்செய்ததில் குறிப்பிட்ட காட்டில் மரவேலைக்குத்தக்க விருக்ஷங்களில்லா திருப்பதாலும், அக்காட்டிலிருந்து பாரெஸ்டு டிபார்டு மெண்டாருக்கு ஒரு வரும்படியும் வராதபடியாலும் அதில் கிராமத்தார்கள் தங்களுடைய மாடுகளை அபராதக்கட்டண விகிதங்களில்லாமல் சாதாரண மேய்ச்சல் விகிதங்களின் படியே மேய்க்கும் படியாய் அநுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். கலெக்டர் அவர்கள் சங்கத்தாரை இது விஷயமாய் ஜில்லா பாரெஸ்டு ஆபீசரைக் கேழ்க்கும்படி பதலளித்தார். பின்பு ஜில்லா பாரெஸ்டு ஆபீஸரும் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை.

ஒரு கிராமத்தில் மேய்ச்சல் சௌகரியங்கள் குறைவாயிருப்பதும் அதில் 3211 மாடுகளிருப்பதும் ஒரு வரும்படியைக் கொடுக்காததர்க்கு ஒரு உபயோகமு மில்லாமல் 1 வகுப்பு பாரெஸ்டு ஆக வைக்கப்பட்டு அதில் மேய்ச்சல் அநுமதிக்கப் படாமலிருப்பதும் கவர்மெண்டார் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்களே. கனம் ரிவெனியூ போர்டார் அவர்கள் இவ்விஷயங்களை நன்றாய்க் கவனித்துப் பன்னிமடை கிராமத்தில் ஒரு பாரெஸ்டு பஞ்சாயத்தை ஏற்படுத்தி அதன் நிர்வாஹத்திற்கு மேற் கூறிய குருடிமலை ரிஸர்வை அமைக்க வேண்டுமென்று கோருகிறோம். பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளின் வருஷாந்திர மாஹாண மஹாநாடுகளில் முதல் கிளாஸ்

என்று அமைக்கப் பட்டிருக்கிற பல காடுகள் அவ்வகுப்புக்குத் தகுதியல்லவென்றும் அவைகள் பஞ்சாயத்துகளின் நிர்வாஹத்திற்கு ஒப்புவிக்கப்பட வேண்டுமென்றும் இது விஷயமாய் கவர்மெண்டார் எல்லாக் காடுகளையும் ரிகிளாவிபை செய்ய வேண்டு மென்றும் ஒரு தீர்மானம் கைக்கொள்ளப் பட்டு வருகிறது. இந்த ரி ஸர்வேயும் ரிகிளாசிபிகேஷனும் எவ்வளவு அவசரமான தென்றும் அவசியமான தென்றும் பன்னிமடை கூட்டுறவு சங்கத்தின் நடவடிக்கைகளே நன்றாய் நிரூபிக்கும். கவர்மெண்டார் இனியாவது கவனிப் பார்களென்று நம்புகிறோம்.

## மதிப்புரை.

கிராம முன்னேற்றம். நவம்பர். 1930 ஆசிரியர் ஓ. சம்பந்த முதலியார். மாகஸீன் அச்சுக்கூடம், செங்கல்பட்டு.

நம்முடைய தேசத்து ஜனத்தொகையில் 10 இல் 9 பெயர்களாயிருக்கிற கிராம ஜனங்கள் கல்வியில்லாதவர்களும் விவேகமில்லாதவர்களுமாயிருப்பதால் தேசாபி விருத்தி இயக்கங்களின் முயற்சிகள் தக்கபடி பயன்படுகிறதில்லை. ஆகவே, கவர்மெண்டாரும், ஜனத்தலைவர்களும் தனவான்களும் கிராம ஜனக் கல்வி நிமித்தமாகவே தங்களுடைய கவனத்தை யெல்லாம் செலுத்தி திரவியங்களைச் செலவிட வேண்டுமென்பது வெகு அவசரமான முக்கிய விஷயமாகிறது. கிராமங்களில் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பாடசாலைகள் ஏற்பட வேண்டியதுடன், வயதுவந்த பயருஷிய ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் இராப்பள்ளிக்கூடங்களும், கிரந்த வாசக சாலைகளும், வர்த்தமானப் பத்திரிகை வாசக சாலைகளும், உலக அதிசய சம்பவங்களையும் பல தேச அபிவிருத்தி முயர்ச்சிகளையும் காக்ஷி காட்டக்கூடிய ஸினிமாக்களும் ஏற்படவும் வேண்டும். பத்திரிகைகளை வாசிப்பதிலும், அவைகள் வாசிக்கப் பட்டுக் கேட்பதிலும் கிராம ஜனங்களுக்கு அபிருசியிருப்பதால் தேசாபி விருத்தி நோக்கமுள்ள பத்திரிகைகள் ஆயிரமடங்காக அதிகரித்தல் வேண்டும். ஆகவே, நாம் "கிராம முன்னேற்றம்" என்கிற பத்திரிகைக்கு நன்கு வரவளித்து, அதையும் நம்மோடு தேசாபி விருத்தி நிமித்தம் நிறம்ப உழைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். "கிராம முன்னேற்றத்தின்" பத்திராசிரியர் கூட்டுறவு சங்க மேற்பார்வை ஐக்கியத் தலைவராகவிருப்பதால் அவர் கிராம ஜனங்களோடு அதிகமாகப் பொழங்கப்பட்டவர். அவருக்குத்தான் கிராம ஜனங்களின் கஷ்டங்களும் குறைகளும் நன்றாய்த் தெரியக் கூடும். அவர் தான் அவைகளின் நிமித்தம் தக்க யோசனைகளைச் சொல்லக் கூடும்.

நமக்குப் பரிசீலனைக்கு வந்திருக்கிற சஞ்சிகையில் ஐக்கிய இயக்க விஷய நிபுணராகிய ராவ். பஹதூர் ஏ. வேதாசல ஐய்யர்



அவர்கள் கிராம ஜனங்களுக்குப் பண உதவியைக் கஷ்டமில்லாமல் செய்யக் கூடிய நில அடமான பாங்குகள் ஏற்பட வேண்டிய விஷயத்தைப்பற்றி வெகு உயர்வான யோசனைகளையடங்கிய ஒரு அரிய வியாஸத்தை யெழுதியிருக்கிறார். மற்றொரு வியாஸத்தில் ஒரு ஆசிரியர் கூட்டுறவு சங்கங்களைக் கிராமங்களில் ஸ்தாபிப்பதற்கு முன் அவைகளை உபயோகிக்க வேண்டிய ஜனங்கள் ஐக்கிய விஷயக்கல்வி போதனைகளை முன்னதாகவே அடைந்திருக்க வேண்டுமென்று கூறுகிறார். மற்றும், பஞ்சாயத்து விஷய சம்பந்தமாகவும், சுகாதார விஷய சம்பந்தமாகவும் சிறந்த கட்டுரைகளும் எழுதப்பட்டிருக்கின்றன.

"கிராம முன்னேற்றம்" என்கிற பத்திரிகைக்கு நீண்ட கால வாழ்வை நாம் மனப் பூர்வமாகக் கோருகிறோம். பத்திரிகை நேர்த்தியாகப் பதிப்பிக்கப் பட்டுத் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

## நமது பத்திரிகை.

இச்சஞ்சிகையிலிருந்து நமது பத்திரிகையின் 6-வது மலர் தொடங்குகிறது; பத்திரிகை $4\frac{1}{2}$ வருடங்களாக நடந்து வருகிறது. ஆரம்பம் முதல் அதன் நோக்கத்துக்கு ஏற்றபடியே கிராமாபிவிருத்தயின் நிமித்தமாகவும், அவ்வபிவிருத்தி தக்கபடி அமைவதற்கு அவசியமாயிருக்கிற பாரெஸ்டு பஞ்சாயத்தியக்கத்தின் முன்னேற்ற நிமித்தமாகவும் பத்திரிகையில் சிறந்த தேசாபிமானிகளாலும், தலைவர்களாலும், நிபுணர்களாலும் கட்டுரைகள் எழுதப்பட்டு வருகின்றன, பஞ்சாயத்துகளின் குறைகளைப்பற்றியும் அடிக்கடி கட்டுரைகள் எழுதப்பட்டு வருகின்றன. பத்திரிகையானது சந்தாநேயர்களாலும், பஞ்சாயத்தார்களாலும் பிரமுகர்களாலும் அயல்நாடுகளாலும் புகழப்பட்டு வருகிறது. இந்தியா கவர்மெண்டாரும் பல மாஹாண கவர்மெண்டுகளும் அதிகாரிகளும் பத்திரிகையை ஆதரித்து வருகிறார்கள். நமது மாஹானகவர்மெண்டும் ரெவிநியூ போடாரும்தான் அதை இன்னும் ஆதரிக்காமல் இருக்கிறார்கள். அவர்களும் ஆதரிக்கவேண்டுமென்று வணக்கமாய்க்கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்தார்கள் அறியவேண்டியது என்னவென்றால் இன்னும்அநேகபஞ்சாயத்துகள் சந்தாவைக் கட்டாமல் பாக்கியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்கிற முக்கிய விஸனிக்கத் தக்க விஷயம். சந்தா பாக்கியானது 3000, 4000 ரூபாய்களாகச் சுமந்து போனால் பத்திரிகை எப்படி நடக்கும்? பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியன் கலையாமல் நடைபெறுவதும், அவ்வியக்கம் அழியாமலிருப்பதும் நமது பத்திரிகை நடைபெறுவதாலேயே யென்று அவர்களுக்குத் தெரிந்திருக்கையில் பஞ்சாயத்துகள் பாக்கிகளை இன்னும் வைத்திக் கொண்டிருக்கலாமா? ஆகவே, உடனே ஒவ்வொரு பஞ்சாயத்தாரும் இவ் விஷயத்தை முக்கியவேலையாய் எடுத்துக்கொண்டு பஞ்சாயத்துகளின் சந்தா பாக்கிகளை தவக்கமில்லாமல் உடனே செலுத்தும்படிச் செய்யவேண்டும்.

19940

பத்திரிகை நன்றாய் நடந்து எங்கும் புகழப்படுவது சம்பளமில்லாமல் $4\frac{1}{2}$ வருஷங்களாக உழைத்து வரும் கௌரவ ஆசிரியருக்குத் திருப்தியைக் கொடுப்பதோடு, அது பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்கள் அனைவருக்கும் யூனியனுக்குங்கூட கௌரவத்தைக் கொடுக்கிறது.

கட்டுரைகளை எழுதிவந்த கனவான்களுக்கும் இந்தியா கவர்மெண்டுக்கும், பல பாஹாண கவர்மெண்டுக்கும், அதிகாரிகளுக்கும் நமது மனபூர்ணமான வந்தனத்தை அளிக்கிறோம்.

# சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்து ஸ்டாண்டிங்கு ஆர்டரின் சம்பந்தமாக சில யோசனைகள்.

(ஸ்ரீமான் ஜீ. ஹரிஸர்வோத்தமராவ் எம். ஏ.)

டிராப்டு ஸ்டாண்டிங் ஆர்டரைப்பற்றி அதிகமாய்ச் சொல்ல வேண்டியதில்லை. கவர்மெண்டு காடுகளில் மேய்ச்சலுக்கு முக்கியமாக வேண்டிய காடுகளெல்லாம் பாரெஸ்டு இலாகாவின் நிர்வாகத்திலிருந்து விலக்கப்படவேண்டுமென்றும், இவ்விதமாக விலக்கப்பட்ட மேய்ச்சல் காடுகளிலிருந்து கவர்மெண்டார் வரும்படியையே முக்கியமாக உத்தேசிக்கக்கூடாதென்றும் கவர்மெண்டாரால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் நடவடிக்கையில் மேற்கூறிய நோக்கங்கள் சரிவர அநுஷ்டிக்கப்படுகிறதில்லை. இம்மேய்ச்சல்க் காடுகளின் வரவுசிலவு திட்டங்கள் கவர்மெண்டாரின் பட்ஜெட்டுகளில் ரெவின்யூ இலாகாவின்கீழ் காண்பிக்கப்படுகிறதில்லை. அவைகள் பாரெஸ்டு இலாகாவின் கீழ் தான் காண்பிக்கப்படுகின்றன. பாரெஸ்டு இலாகா என்னசொல்கிறதோ அதன்படியேதான் கவர்மெண்டார் போகிறார்கள். பஞ்சாயத்துக்காடுகளிலிருந்தோ கவர்மெண்டார் இரண்டுலக்ஷரூபாய் வரும்படியை அடைகிறார்கள். இந்த இரண்டுலக்ஷரூபாயும் கவர்மென்டாருக்கு பாரெஸ்டு இலாகாவின் சம்பந்தமாக ஏற்படும் நஷ்டத்துக்கு ஈடாக்கப்படுகிறது. பாரெஸ்டு பஞ்சாயத்துகள் பாரெஸ்டு இலாகாவின் வேலைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டனவே யொழிய அவைகள் சரியான அந்தஸ்தையும் அதிகாரத்தையும் அடையவேயில்லை, அவைகளுக்குத் தக்கமரியாதையையும் கவர்மெண்டார் கொடுக்கவில்லை. முதல்முதலாக பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளின் தேர்தல் விஷயத்தைக் கவனிப்போம். தேர்தலை நடத்தவேண்டியதற்கு அதிகாரமும் வாக்குரிமை விஷயமும் கவனிக்கத்தக்கவை. டிப்டி தாசில்தார்கள்தான் தேர்தல்களை நடத்துகிறார்கள்; அவர்கள்தான் தேர்தல்கள் நடக்க வேண்டிய தினத்தை நிர்ணயிக்கிறார்கள்; அவர்கள்தான் தேர்தல் சம்பந்தமாகப்



பிரகடனங்களை தண்டோரா மூலமாக கிராமங்களிலே வெளியிடுகிறார்கள்; அவர்களே வாக்காளர்களின் ஜாப்தாவைத்தயார் செய்கிறார்கள். டிப்டி தாசில்தார்களின் கலப்பு பல இடையூறுகளுக்கும் காரணமாகிறது. இதையெல்லாம் அறிந்திருக்கிற போர்டாரும், டிராப்டு ஸ்டாண்டிங்கு ஆர்டரை ஆலோசித்த சபையாரும் மேற்கூறிய டிப்டி தாசில்தார்களின் சம்பந்தத்தை யொழிக்க ஒரு ஏற்பாட்டையும் கைக்கொள்ளவே யில்லை. டிப்டி தாசில்தார்களின் அதிகாரம் முன்போல் தான் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சபையார் ஒரு வாக்கியத்தை மாத்திரம் சேர்த்திருக்கிறார்கள். அதாவது அக்ரீமெண்டுகள் புதிப்பிக்கப்படும் காலத்தில் தேர்தல்கள் டிவிஷனல் ஆபீஸர்களால் ஏற்படுத்தப்படவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. டிவிஷனல் ஆபீஸர்களினால் தேர்தல்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்கிற விதியானது டிப்டிதாசில்தார்களின் சம்பந்தத்தை உறுதிப்படுத்துமே யொழிய அது அவர்களின் சம்பந்தத்தையும் அதன்நிமித்தமாக ஏற்படும் கோளாறுகளையும் ஒழிக்கக்கூடியதல்ல, ஏனென்றால்; டிவிஷனல் ஆபீஸர்கள் டிப்டி தாசில்தார்களைக் கொண்டுதான் தேர்தல்களை நடப்பிக்கப் போகிறார்கள். மேலும், இக்காரணத்தினால் டிப்டி தாசில்தார்களுக்கு அதிகார வலிமையும் உண்டாக்கக்கூடியது. இன்னொருவிஷயம் அக்ரீமெண்டுகள் புதுப்பிக்கப்படுகிற காலங்களில் மாத்திரம் டிவிஷனல் ஆபீசர்களின் துவாராவாக தேர்தல்கள் நடக்கவேண்டு மென்றும் இதர சமயங்களில் டிப்டி தாசிலதார்களின் அதிகாரத்தின் படியே அவைகள் நடத்தப்படலாமென்றும் ஏன் விதிக்கப்பட் டிருக்கிறதோ தெரியவில்லை. ஏன் டிவிஷனல் ஆபீஸர்கள் பஞ்சாயத்து டிப்டி தாசில்தார்களின் சம்பந்த மில்லாமலே தேர்தல்களை நடப்பிக்கக் கூடாதோ தெரியவில்லை. இவ்விதமான ஒழுங்கு ஏற்படவேண்டியது வெகுஅவசியம். இல்லாவிட்டால் பாரெஸ்டு பஞ்சாயத்துப் பரிபாலனம் ஒருக்காலும் திருப்தியாக நடவாது. பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளுக்கு அத்து கிராமமே என்று நிர்ணயிக்கப்படுவதும் சரியல்ல. ரிஸர்வுகள் பெரிதாக விருந்தால் அயல் கிராமங்களின் கால்நடைகளும் அதில் மேயக்கூடுமாதலால் அக்கிராமங்களும் அவைகளை உபயோகிக்கவேண்டும்.

மூன்றாவது விதியின்படி முதல் முதலான அக்ரீமெண்டு ஏற்படவேண்டிய காலத்தில் டிப்டி தாசில்தார்கள் கிராமத்தார்களோடு ரிஸர்வுகளைப் பார்வையிடவேண்டுமென்றும், டிப்டி தாசில்தார்கள் அவர்களுக்கு பஞ்சாயத்து ஏற்பாட்டின் ஷரத்துகளையும், கடமைகளையும், அதிகாரங்களையும் எடுத்துச் சொல்ல வேண்டுமென்றும் சொல்லப்பட் டிருக்கிறது. முதல் முதலான அக்ரீமெண்டு விஷயமாய் டிப்டிதாசில்தார்கள் நேராக வேலை செய்யலாமாம். ஆனால் அவர்கள், அக்ரீமெண்டுகள் புதிப்பிக்கப்படும் பொழுது மாத்திரம் ரெவின்யூடிவிஷனல் ஆபீஸர்களின் மூலமாகச் சம்பந்தப்பட

வேண்டுமாம். நான் எடுத்துக்காட்டுவ தென்னவென்றால் டிவிஷனல் ஆபீஸர்களின் சம்பந்தத்தினால் அவர்களுக்கு அதிகாரம் வலிவையடைகிறது என்பது தான். வாக்காளர் ஜாப்தாவானது டிப்டி தாசில்தார்களால் தான் நிர்ணயிக்கப்படுகிறது. டிப்டி தாசில்தார்களின் மனதில் எந்தெந்த நபருக்குக் கால்நடைகள் இருப்பதாகவும், மேய்ப்புக்கு அனுப்பப்படுவதாகவும் தோன்றுகிறதோ அந்தந்த நபர்களை மாத்திரம்தான் அவர் ஜாப்தாவில் சேர்ப்பார். அவ்விஷயம் அவருடைய இஷ்டத்தைப் பொருத்திருக்கிறது. அவர் அந்தந்த வருஷத்[illegible]கிரேஜிங் பெர்மிட்டுகளைக் கொண்டு தன்னுடைய தீர்மானத்தை யடைவார். அந்தந்தவருஷத்திய பெர்மிட்டுகளைக் கொண்டு வாக்காளர்களின் ஜாப்தாவை ஏற்படுத்துவது சரியான முறையல்ல. ஜாப்தா தயாரிக்கப்படும் சமயத்தில் ஊரிலுள்ள கால்நடைச் சொந்தக்காரர்களில் வெகுபெயர்கள் பெர்மிட்டுகளை வாங்கிக்கொள்ளாம லிருக்கக்கூடும். ஆகவே, முந்திய வருஷத்தில் பெர்மிட்டு வாங்கியவர்களை வாக்காளர்களாகச்செய்வது தான் சரியான முறை. இல்லாவிட்டால் கிராமங்களிலுள்ள கால்நடைச் சொந்தக்காரர்களெல்லோரையும் ஜாப்தாவில் சேர்த்து அவர்களை ஒருகுறிப்பிட்ட தேதிக்குள் ரிஜிஸ்டர் செய்து கொள்ளும்படி உத்திரவிடவேண்டும். இவ்வித ஏற்பாடு பஞ்சாயத்துகளுக்கு பெர்மிட்டுகளின் மூலமாக நல்ல வரும்படிகளையும் யுண்டுபண்ணும். இன்னும் நல்ல முறையாதெனில் கிராமங்களிலுள்ள ஒவ்வொரு நிலச்சொந்தக்காரனையும் கால் நடைச்சொந்தக்காரனையும் வாக்காளனாகச் சேர்ப்பதுதான்; ஒவ்வொரு நிலச் சொந்தக்காரனும் வியவஸாய சம்பந்தமாகக் கால்நடைகளை வைத்துக்கொண்டிருப்பானாதலாலும், அவன் விறகு எருத்தழைகளுக்காக பஞ்சாயத்துக் காடுகளை நாடவேண்டியிருப்பதாலும் மேற்கூறியவாறு வாக்காளர்களின் ஜாப்தா தயாரிக்கப்படுவதுதான் சீரானமுறையாகக் காண்கிறது.

பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் பரிபாலனமானது அக்ரீமெண்டுகளை முக்கிய ஆதாரவாக உடைத்தாயிருக்கிறது. கவர்மெண்டின் நோக்கம் பஞ்சாயத்துகளிடத்திலிருந்து வரும்படிகளை அடைவதாக விருக்கிறவரையில் அக்ரீமெண்டுகளின் அமுல்தான் அதிகமாகவிருக்கும். அஸ்ஸெஸ்மெண்டானது, டிராப்டு ஸ்டாண்டிங்கு ஆர்டரின்படி, பிரதி பஞ்சாயத்துக்கும் வருகிற வரும்படிகளான (1) மேய்ச்சல் வரும்படி (2) மைனர் பாரெஸ்டு பிராடியூஸ், அதாவது காடுகளின் சில்லரை உற்பத்திகளால் ஏற்படும் வரும்படி, (3) ஆவாரம்பட்டை விற்றமுதல், (4) விறகு கூப்புகளிலிருந்து வரும்படி, (5) கருங்கல், துருக்கல், கிளிஞ்சல் முதலிய குவாரிகளிலிருந்து வரும்படி, (6) பாரெஸ்டுகளிலிலுள்ள தென்னை, பனை, ஈச்சை, இவை சம்பந்தமாகக் கள்ளுக் குத்தகை வரும்படி, (7) டிம்பர் பெர்மிட் வரும்படி இவைகளின் மொத்தத்திலிருந்து (1) வாட்சரின் சம்பளம், (2) ரிஸர்வின் அபிவிருத்தி



முயர்ச்சிகளின் செலவு, (3) எல்லைக் கல்களையும், எல்லைகளையும் காப்பாற்ற வேண்டிய வகையில் செலவு, (4) சில்லரைச்செலவுகள் இவைகளைத் தள்ளிய பின்பு ஏற்படும் மீதித்தொகையாக நிர்ணயிக்கப் படவேண்டும். முதல் ஐட்டமும், இரண்டாம் ஐட்டமும் கடைசி ஐட்டமாகிய சில்லரைச்செலவும் கம்மிட்டியாரால் சேர்க்கப்பட்டன. பஞ்சாயத்துகளின் வரும்படி ஐயிட்டங்களில் கம்பவுண்டிங்கு பீஸுகளும், கோர்ட்டுகளால் விதிக்கப்படும் அபராதங்களும் சேர்க்கப்படவில்லை. இவைகளும் சேர்க்கப் படவேண்டும். கம்மிட்டியார் கம்பவுண்டிங்கு பீசில் பாதி பொதுபண்டைச் சேரவேண்டும், கால்பாகம் பஞ்சாயத்தைச் சேரவேண்டும் மீதி கால்பாகம் கவர்மெண்டைச் சேரவேண்டுமென்று சொல்கிறார்கள் அதுசரியல்ல. பஞ்சாயத்துகள்தான் பாதியை யடையவேண்டும், கவர்மெண்டாருக்கு கால்பாகம் சேர்ந்தால்போதும். அக்ரீமெண்டு பாரமே இப்பொழுது இருக்கிறபடி யிருக்கக்கூடாது. அது இப்படியே இருக்கும் பக்ஷத்தில் பாரெஸ்டு பஞ்சாயத்துகள் தேசாபிவிருத்திக்குத் தக்கபடி உழைக்கமுடியாது. க்ஷாம காலங்களில் மாடுகளைத் தீர்வையில்லாமல் மேய்க்கவிடப் பஞ்சாயத்துகளுக்கும் கலெக்டர்களுக்கும் அதிகாரம் வேண்டும். கலெக்டர்களுக்கு அஸ்ஸெஸ்மெண்டுகளில் வஜாச்செய்கிற அதிகாரமும் இருக்கவேண்டும். நிர்ணயிக்கப்பட்ட அஸ்ஸெஸ்மெண்டுகளைச் செலுத்துவதற்குப் போதுமான வரும்படிகூட சில வருஷங்களில் ஏற்படாது. கவர்மெண்டு ரிஸர்வுகளின் சம்பந்தமாகக் கலெக்டர்களுக்கு இலவச மேய்ச்சலை உத்திரவு பண்ண அதிகாரமிருக்கிறது.

அக்ரீமெண்டு பாரத்தின் இரண்டாவது அப்பெண்டிகளின் 9-வது ஐட்டத்தில் பஞ்சாயத்து அடையும் பத்திரவியமானது முதல் முதலாகப் பஞ்சாயத்துக் காட்டின் அபிவிருத்திக்காகச் சில விடப்பட வேண்டுமென்றும் பிறகு பஞ்சாயத்துக் கிராமங்களின் அபிவிருத்திக்காகச் சிலவிடப்பட வேண்டுமென்றும் கூறப் பட்டிருக்கிறது. டிராப்டு ஸ்டாண்டிங்கு ஆர்டரில், அஸ்ஸெஸ்மெண்டை விதிக்கிற வகையில் வரும்படிகளின் விவரங்களும் சிலவு விவரங்களும் குறிப்பிடப்பட்டு, வரும்படி மொத்தத்தில் சிலவு மொத்தத்தைக் கழித்து மீதியாகும் பணம்தான் அஸ்ஸெஸ்மெண்டென்று விதிக்கப்பட்டிருக்கையில், எப்படி பஞ்சாயத்துக் காட்டு அபிவிருத்தி முயர்ச்சிகளும், பஞ்சாயத்து கிராம அபிவிருத்தி முயர்ச்சிகளும் தக்கபடி நிறைவேறுவதற்கு இலாபத்தொகை உதவக்கூடுமோ தெரியவில்லை. கண்டின்ஜண்டு சிலவுகளுக்கே இலாபப்பணம் ஏற்படாதிருக்கையில் அபிவிருத்தி முயற்சிகளுக்கு அது எப்படி ஏற்படும்? ஆனபோதிலும், அபிவிருத்தி முயர்ச்சிகளால் ஏற்படக்கூடிய அதிக வரும்படியைக் கவர்மெண்டார் குத்தகையைப் புதிப்பிக்கும் பொழுது அஸ்ஸெஸ்மெண்டை விதிப்பதில் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்று கமிட்டியார் அபிப்பிராயம் கூறியிருப்பதால் ஒருக்கால் அபிவிருத்தி முயர்ச்சிகளுக்குப் பணமேற்படவும் கூடும். கவர்மெண்டார் மேற்கூறிய அபிப்

பிராயத்தை ஆமோதித்தால் இதில் இச் சௌகரியம் ஏற்படும். அக்ரீமெண்டு களில்லாமல் பஞ்சாயத்துகள் காடுகளை நிர்வஹிக்கக்கூடாது என்கிற நோக்கமே கவர்மெண்டுக்கு இருக்குமாகில் கவர்மெண்டார் பஞ்சாயத்துகளைச் சிலவுபோக இருக்கும்பாக்கியில் பாதியை ரிஸர்வுபண்டாக வைத்துவைக்கும் படி உத்திரவிடலாம். இந்தரிஸர்வு பண்டிலிருந்து பஞ்சாயத்துகள் எதிர்பார்க்காத சிலவுகள் ஏற்படும் பொழுது கலெக்டரின் உத்திரவின் பேரில் பணம் வாங்கிக்கொள்ளலாம். மேய்ச்சல் விகிதங்கள் கம்மிட்டியார் சிபாரசுகளின் படியே இருக்கவேண்டும். பஞ்சாயத்துக் காடுகள் பலப்பிரதேசங்களில் பாரெஸ்டு இலாகாக்காடுகளைப் போல் மேய்ச்சல் சௌகரியங்களோடும் பச்சையுள்ளதாகவும் இல்லை. க்ஷாமகாலங்களில் அவைகள் வெறும் பொட்டல்களாகவே இருக்கின்றன. பஞ்சாயத்துகளுக்கு மேய்ச்சல் கட்டணவிகிதங்களை விதிக்க அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். பஞ்சாயத்துக் காடுகளின் மேய்ச்சல் விகிதங்கள் அக்கம்பக்கத்து கவர்மெண்டு காடுகளின் விகிதங்களுக்கு மேல்படக் கூடாது. பஞ்சாயத்துக்காடுகளின் மேய்ச்சல் விகிதங்களை அக்கம்பக்க கவர்மெண்டு காடுகளின் மேய்ச்சல் விகிதங்களை விட அதிகப்படுத்த உத்தேசமிருந்தால் கவர்மெண்டார் கலெக்டர்களின் அபிப்பிராயங்களை அடைந்து அவைகளின்படி நடக்கவேண்டும். டிராப்டு ஸ்டாண்டிங்கு ஆர்டரில் மேய்ச்சல் விகிதங்கள் விதிக்கப்பட வேண்டிய வகையில் பஞ்சாயத்துகள் தாங்கள் அஸ்ஸெஸ்மெண்டுகளைக் கட்டவும், அபிவிருத்தி வேலைகளைச் செய்யவும் வேண்டிய பணங்களைக் கொடுக்கக்கூடிய வருமானத்தை அவைகள் அடையும் படியான விகிதங்களை விதிக்க வெண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இது வெகு ஆச்சரியமாக விருக்கிறது. பஞ்சாயத்துகளுக்குத் தங்களுடைய சிலவுகளை நடத்திக் கொண்ட பின்பு அஸ்ஸெஸ்மெண்டுகளைக் கட்ட பண மில்லாத போனால் கவர்மெண்டார் அஸ்ஸெஸ்மெண்டை இழக்கத்தான் வேண்டும். மேற்கூறிய நிபந்தனையானது பஞ்சாயத்து சம்பந்தமாய்க் கவர்மெண்டாருக்கு லாப உத்தேசமேயொழிய கிராம ஜன க்ஷேம நோக்க உத்தேசமில்லை யென்பதை நன்றாய் விளக்குகிறது.

(தொடரும்.)

199400